# முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

முன்னிலை:-**திருமதி ஆ.முத்துசாரதா, பி.எல்., பி.ஜி.டி.பி.எம்.,**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்.**

**2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் நாள் திங்கட்கிழமை**

<u>இந்திய விவாகரத்து அசல் மனு எண்-67/2024</u>
( CNR. NO:-TNDG010034482024)

வெர்ஜின் சோபிதா (34/2024)
க/பெ. அந்தோணி ராஜீவ்குமார் .. மனுதாரர்

// எதிராக //

1) அந்தோணி ராஜீவ்குமார் (34/2024),
த/பெ. அருள் ஜோசப்ராஜ்
2) ரபேக்கால்,
க/பெ. அந்தோணி ராஜீவ்குமார்

.. எதிர்மனுதாரர்கள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்னர் 13.02.2025 தேதியன்று வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. திருவேங்கடம், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினர்களாகக் கருதப்பட்டும், மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டும், சாட்சிகளின் சாட்சியங்கள், குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் யாவற்றையும், பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இந்த மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பித்த

**உத்தரவு**

மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.07.2012ம் தேதி திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் Sacred Heart Shrine ஆலயத்தில் வைத்து நடைபெற்ற திருமணத்தை ரத்துச் செய்து விவாகரத்து உத்தரவு வழங்கக்கோரி இந்திய விவாகரத்து சட்டப் பிரிவு 10(1)(i)(x)–ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:–**

மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.07.2012ம் தேதி கிறிஸ்தவ சமய முறைப்படி இரு தரப்பு பெற்றோர்கள், உறவினர்கள் முன்னிலையில் திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் Sacred Heart Shrine ஆலயத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணம் பதிவு செய்வதற்கு முன்பே மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் வசித்து வந்தனர். திருமணத்தின் பயனாய் மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 20.05.2010ம் தேதி மெல்வின் ரோஷன் என்ற ஆண்குழந்தையும், 20.12.2012ம் தேதி தரணி என்ற பெண் குழந்தையும் பிறந்துள்ளனர். திருமணம் முடிந்து 3 வருடங்கள் கழித்து 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரருடன் பேசி வந்ததை மனுதாரர் 2021ம் வருடம் டிசம்பர் மாதத்தில் கேட்டபோது, 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரை திருமணம் செய்து விட்டதாகவும், அதன் பயனாய் அக்ஷயநிலா என்ற குழந்தை இருப்பதாகவும் கூறியுள்ளார். இதுகுறித்து மனுதாரர், 1ம் எதிர்மனுதாரரின் பெற்றோரிடம் கேட்டபோது அவர்கள் தங்கள் மகன்

அப்படித்தான் இருப்பதாகவும், தன் மகனைப் பற்றி வெளியே யாரிடமும் பேசக்கூடாது என மிரட்டியுள்ளார்கள். 12.12.2021ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரைப் பற்றி யாரிடமும் எதுவும் சொல்லக்கூடாது என சண்டையிட்டதற்கு மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரின் தொடர்பை கைவிடாவிட்டால் தனது பெற்றோர் வீட்டிறகுச் சென்றுவிடுவதாக கூறியதால், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை அடித்து, மிரட்டி, குழந்தைகளை அவர் வசம் வைத்துக்கொண்டு மனுதாரரை வீட்டை விட்டு துரத்திவிட்டார். மனுதாரர் உயிருடன் இருக்கும்போதே 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரை திருமணம் செய்துள்ளது சம்பந்தமாக திண்டுக்கல் கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்ததன் அடிப்படையில் Crl.M.P.No. 14984/2022 ன்படி திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளர் சாணார்பட்டி காவல்நிலைய குற்ற எண் 341/2022 சட்டப்பிரிவுகள் 498(எ), 494, 323, 506(i) இ.த.ச.–வின்படி கடந்த 08.12.2022ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அதன்பேரில் திண்டுக்கல் கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் சிசி எண் 53/2024 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர் கடந்த 2 ½ வருடங்களுக்கு மேலாக 1ம் எதிர்மனுதாரரையும் அவரது குழந்தைகளையும் பிரிந்து வாழ்ந்து வருகிறார். 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர்களின் செயல்களால் மனுதாரர் உடலளவிலும், மனதளவிலும் பாதிக்கப்பட்டுள்ளார். மேலும், இனிவரும் காலங்களில் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வாய்ப்பில்லை

என்பதால் விவாகரத்து கோரி இம்மனுவினைத் தாக்கல் செய்துள்ளார்.மனுப்படி உத்தரவாகவேண்டும்.

3) எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு, அதனைப் பெற்றுக்கொண்டு மனு விசாரணையின்போது எதிர்மனுதாரர்களை அழைத்தும் ஆஜராகாததால் இந்நீதிமன்றத்தால் 18.09.2024ம் தேதி ஒருதரப்பு செய்யப்பட்டுள்ளார்கள்.

**<u>4) இம்மனுவில் தீர்விற்கான பிரச்சினை யாதெனில் ,</u>**

மனுதாரர் கோரும் விவாகரத்து பரிகாரம் பெற மனுதாரர் அருகதை உள்ளவரா? என்பதேயாகும்.

5) இம்மனுவில், மனுதாரர் தரப்பில் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு, ம.சா.ஆ.1 முதல் 5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **<u>தீர்வு–</u>**

மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கிறிஸ்தவ சமய முறைப்படி பெற்றோர் மற்றும் உறவினர் முன்னிலையில் கடந்த 04.07.2012ம் தேதி கிறிஸ்தவ சமய முறைப்படி இரு தரப்பு பெற்றோர்கள், உறவினர்கள் முன்னிலையில் திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் Sacred Heart Shrine ஆலயத்தில் வைத்து திருமணம் நடைபெற்றதாகவும், மேற்படி திருமணத்தின் பயனாக 20.05.2010ம் தேதி மெல்வின் ரோஷன் என்ற ஆண்குழந்தையும், 20.12.2012ம் தேதி தரணி

என்ற பெண் குழந்தையும் பிறந்துள்ளதாகவும், திருமணம் முடிந்த 3 வருடங்கள் கழித்து 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரருடன் தொடர்பு வைத்திருந்ததை மனுதாரர் கண்டித்தபோது 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரை திருமணம் செய்துவிட்டதாகவும், அதன்விளைவாக அக்ஷயநிலா என்ற குழந்தை இருப்பதாகவும் கூறியதாகவும், இதுகுறித்து மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்களிடம் கூறியதற்கு அவர்கள் மனுதாரரை மிரட்டியதாகவும், 12.12.2021ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் குழந்தைகளை தன் வசம் வைத்துக்கொண்டு மனுதாரரை மிரட்டி வீட்டை விட்டு துரத்திவிட்டதாகவும், எதிர்மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் பெற்றோர் மீது மனுதாரர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து, அதன் பேரில் திண்டுக்கல் கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் சிசி எண் 53/2024 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும், கடந்த 12.12.2021ம் தேதியிலிருந்து 2 ½ வருடங்களுக்கு மேலாக 1ம் எதிர்மனுதாரரையும் ,குழந்தைகளையும் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், 1ம் எதிர்மனுதாரரின் செயல்களால் மனுதாரர் மனதளவிலும், உடலளவிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, இனியும், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு வாய்ப்பு எதுவும் இல்லை என்பதால் மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.07.2012ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்யக்கோரி தனது வாதத்தை முன்வைத்துள்ளார்.

7) மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு மனுவில் கூறிய சங்கதிகளையே தனது முதல் விசாரணை சாட்சியத்திலும் எடுத்துரைத்து மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் திருமண பதிவுச் சான்றிதழ் ம.சா.ஆ.1 ஆகவும், 20.05.2010ம் தேதியில் பிறந்த மெல்வின் ரோஷன் என்பவரின் பிறப்புச் சான்றிதழ் நகல் ம.சா.ஆ.2 ஆகவும, 20.12.2012ம் தேதியில் பிறந்த தரணி என்பவரின் பிறப்புச் சான்றிதழ் நகல் ம.சா.ஆ.3 ஆகவும், சாணார்பட்டி காவல்நிலைய குற்ற எண் 341/2022ன் முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.4 ஆகவும், தன் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்து, திருமணம் முடிந்த 3 ஆண்டுகள் கழித்து 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரருடன் தொடர்பு வைத்து , 2ம் எதிர்மனுதாரரை திருமணம் செய்து, அதன் விளைவாக அக்ஷயநிலா என்ற குழந்தை பிறந்துள்ளதாகவும், இது குறித்து 1ம் எதிர்மனுதாரரை கேட்டதற்கு, 1ம் எதிர்மனுதாரர் குழந்தைகளை தன் வசம் வைத்துக்கொண்டு தன்னை விரட்டி விட்டதாகவும், 12.12.2021 முதல் தான் எதிர்மனுதாரர் மற்றும் குழந்தைகளை விட்டுப் பிரிந்து தனது பெற்றோர் வீட்டில் வசித்து வருவதாகவும், 1ம் எதிர்மனுதாரரின் செய்கையால் தான் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியிருப்பதாகவும் எனவே, தனது கணவரிடமிருந்து தனக்கு விவாகரத்து வழங்கி உத்தரவிடக்கோரி சாட்சியமளித்துள்ளார்.

8) மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரருக்கும், ணும் எதிர்மனுதாரருக்கும் கடந்த

04.07.2012ம் தேதியன்று கிறிஸ்துவ முறைப்படி திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் தாலுகா, என். பஞ்சம்பட்டியில் உள்ள Sacred Heart Shrine ஆலயத்தில் நடைபெற்று மேற்படி சர்ச்சில் திருமணம் பதிவு செய்யப்பட்டது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. அந்த திருமண பதிவுச் சான்றிதழ் அசல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆக மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் தங்கள் திருமணத்தைத் தொடர்ந்து கணவன்–மனைவியாக தங்கள் இல்லற வாழ்க்கையை வாழ்ந்து வந்திருக்கும் விபரம் மேற்படி நடவடிக்கையில் இருந்து தெளிவாகிறது. அவர்களது இல்லறத்தின் பயனாய் மெல்வின் ரோஷன் மற்றும் தரணி என்ற குழந்தைகள் பிறந்துள்ளதற்கான பிறப்புச் சான்றிதழ்கள் ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. இந்நிலையில், திருமணம் முடிந்த 3 வருடங்கள் கழித்து 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரருடன் தொடர்பு வைத்து, திருமணம் செய்து, அதன் பயனாய் அக்ஷயநிலா என்ற குழந்தை பிறந்துள்ளதாகவும், இது குறித்து மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரை கேட்டதற்கு 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை விரட்டி விட்டதாகவும், கடந்த 12.12.2021 முதல் 1ம் எதிர்மனுதாரரையும் குழந்தையையும் பிரிந்து வாழ்ந்து வருகிறார் எனக் கூறியுள்ள நிலையில், இனியும் இருவரும் சேர்ந்து வாழ்வதற்கான சூழ்நிலை இருப்பதாக அறிய முடியவில்லை. மனுதாரர் தனது தரப்பு வழக்கை நிரூபித்துள்ள நிலையில், மனுதாரரின் மனுவினை மறுத்து தனது தரப்பு வழக்கை நிரூபிக்க எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. இதுகுறித்து

இந்த மனுவில் அமைந்திருக்கும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களையும் காணும்போது, மனுதாரர், 1ம் எதிர்மனுதாரர், குழந்தைகளையும் விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறார் எனக் கூறியுள்ள நிலையில், இனியும் இருவரும் சேர்ந்து வாழ்வதற்கான சூழ்நிலை இருப்பதாக அறியமுடியவில்லை. மனுதாரர் தனது தரப்பு வழக்கை நிரூபித்துள்ள நிலையில், மனுதாரர் கோரும் விவாகரத்து பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.07.2012ம் தேதி திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் Sacred Heart Shrine ஆலயத்தில் வைத்து நடைபெற்ற திருமணம் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டு செலவுத்தொகை வழங்கப்படவில்லை.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு மார்ச் திங்கள் 3ம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.03.13 15:56:59 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

**இணைப்பு :**

**மனுதாரர் தரப்பு சாட்சி—**

ம.சா.1 திருமதி வெர்ஜின் சோபிதா (மனுதாரர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் –</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 04.07.2012 | மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் திருமண பதிவு சான்று அசல் |
| ம.சா.ஆ.2 | 20.05.2010 | மெல்வின் ரோஷன் என்பவரின் பிறப்புச் சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.3 | 20.12.2012 | தரணி என்பவரின் பிறப்புச் சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.4 | 08.12.2022 | சாணார்பட்டி காவல்நிலைய குற்ற 341/2022–ன் முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.5 | -- | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் : இல்லை.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.03.13 15:57:05 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்.
<u>அசல்/நகல் உத்தரவு</u>

IDOP No- **67/2024**

நாள்–03.03.2025